செ. கு. எண்: 336 நாள் : 22.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 22.12.2013

தருமபுரி மாவட்டம், மூக்கனூர் தரப்பு, மூக்கனூர் – கிருஷ்ணாபுரம் சாலையில் 27.11.2013 அன்று பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த கொண்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியன் என்பவரின் மகன் முனுசாமி;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் கிராமம், கிழக்கு கடற்கரை சாலை அருகே 28.11.2013 அன்று வேனில் பயணம் செய்த திண்டிவனம் வட்டம், கீழ்புத்துப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. அரிகிருஷ்ணன் என்பவரின் மகன் வேலாயுதம், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம் மதுரா வெண்புருஷம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மகன் சிவக்குமார்;

சென்னை, வில்லிவாக்கம், M.T.H. சாலையில் 28.11.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ராஜமங்களம் பகுதியைச் சேர்ந்த திரு. சரவணன்;

சென்னை, அடையாறு அருகே 28.11.2013 அன்று சாலையில் சென்று கொண்டிருந்த வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த திரு. ரவிக்குமார் என்பவரின் மனைவி திருமதி தயாநிதி;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், விருதாச்சலம் வட்டம், கோ.பூவனூர் கிராமம், உளுந்தூர்பேட்டை – விருதாச்சலம் சாலையில் 25.11.2013 அன்று காவல் வாகனம் மோதியதில் திரு. சதீஷ்குமார் என்பவரின் மகள் சிறுமி ஹர்ஷினி உயிரிழந்தாள் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9